1160

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

ஆசிரியர்: இளவழகனர்.

# "முல்லைக் கொடி"

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, சித்திரை. 29-4-55 தளிர்-30

20 MAY 1955
MADRAS

திரு, சின்னையா முதலியார்,
தலைவர், தேவாரப் பாடசாலை,
சிதம்பரம்.

திருக்கழிப்பாலையில் திருக்கூட்டத்தினர் வழிபாடு செய்யச் சென்ற போது, மிக்க அன்போடு வரவேற்றுப் பகல் உணவும் மாலைச் சிற்றுண்டியும் கொடுத்துதவியவர்.

திரு, நடராஜ ஓதுவார்,
திருக்கழிப்பாலை.

திருக்கழிப்பாலைக் கோயில் ஓதுவாமூர்த்திகள். இவர் திருக்கூட்டத்திற்கு வரவேற்புப் பா எழுதிப் படித்தவர்கள். ஆசிரியரும், அன்பர்களும் கேட்டுருக அவ்வூர்த் திருப்பதிகங்களை இனிமையாகப் பாடியவர்கள்.

திரு, சொக்கலிங்கம் பிள்ளை,
தருமகர்த்தர்,
திருநாரையூர்.

திருக்கூட்டத்தின் திருப்பயண நிகழ்ச்சியை அறிந்ததும், அவ்வூர்ப் பொல்லாப்பிள்ளையார் திருவிழாவுடன் அவர்கள் வழிபாட்டையும் இணைத்து, அன்று இரவு ஆசிரியர் அவர்கள் குடந்தை திரு P. T. குமாரசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் 'பொல்லாப் பிள்ளையாரை'ப் பற்றிய ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தவும் தக்க விளம்பரங்களையும் அதற்கு ஏற்றவாறு திருக்கூட்டத்தினருக்குத் தங்க இடம், இரவு உணவு வசதிகளையும், அத்துடன் மறுநாள் அவர்கள் திருப்பயணம் தொடர்ந்து நடைபெறச் சுமார் 15 வண்டிகளையும் ஏற்பாடு செய்து பேராதரவு தந்த, கனிந்த அன்புள்ளம் படைத்த பெரியார்.

திரு, இராமலிங்கம் பிள்ளை,
சின்ன பண்ணை,
காட்டுமன்னார் கோயில்

திருக்கூட்டத்தார் திருநாரையூரிலருந்து திருக்கானாட்டு முள்ளூருக்குச் செல்லுகையில், இடையில் திருக்காட்டு மன்னார் கோயில் என்ற ஊரில் அன்பர்களுக்குத் தமது இல்லத்தில் சிற்றுண்டி கொடுத்தும், ஆசிரியர் அவர்கள் குளித்துத் தினசரி வழிபாட்டை முடித்துக்கொள்ள ஏற்ற வசதிகளைச் செய்தும் உதவிய பேரன்பர்.

திரு, சேதுமாதவம் பிள்ளை,
செட்டித்தாங்கல்.

திருக்கடம்பூரில் வழிபாடு முடிந்த உடன் திருக்கூட்டத்தினர் அனைவருக்கும் தமது இல்லத்தில் அன்போடு அன்று பகல் உணவு கொடுத்து ஆதரவு செய்த நல்ல அன்பர்.

திரு, கே. எம். சுந்தரேசம்
பிள்ளை எம். ஏ.
**Sub Registrar**
குமராட்சி.

குருகுலத்தாரைத் திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் திருவிழாவில் சந்தித்து அவர்கள் வழிபாட்டில் கலந்துகொண்டு அன்று அங்கு ஆசிரியர் அவர்கள் நிகழ்த்திய பொன்னுரைகளில் மிக்க ஈடுபாடும் உருக்கமும் கொண்டவர். அவ்வுணர்ச்சியின் உந்துதலால் மறுநாள் தமது ஊராகிய திருக்கானாட்டு முள்ளூரில் திருக்கூட்டத்தாரை மேளதாளங்கள் கோயில் மரியாதைகள் முதலிய சிறப்பு நிலைகளில் வரவேற்று வழிபாடும் சொற்பொழிவும் நிகழ்வித்து நல்ல உணவும் கொடுத்து அனைவரும் அன்று இரவு தங்கவும் தக்க வசதிகள் செய்து கொடுத்தவர். மறுநாள், திருப்பழமண்ணிப் படிக்கரைக்குச் செல்ல, இடையிலுள்ள கொள்ளிட நதியைக் கடந்துபோதற்கான படகு ஏற்பாட்டிற்கும் முயன்று உதவியவர். நல்ல ஆங்கிலப் படிப்புடையவர்; என்றாலும், தமிழ் மொழியிலும் திருவருள் ஈடுபாட்டிலும் ஊக்கமும் உறுதியும் உடைய நல்ல அன்பர்.

திரு, டி. கோவிந்தசாமி பத்தர்
முட்டம், குஞ்சமேடு;
,, நல்லதம்பி படையாச்சி
,, எஸ். கோவிந்தசாமி
படையாச்சி
,, ஏ. வீராசாமி படையாச்சி
,, டி. திருச்சிற்றம்பலப்பிள்ளை
,, ஆர். ராமலிங்கம் பிள்ளை

திருக்கூட்டத்தினருடனிருந்து திருக்கானாட்டு முள்ளூர் நிகழ்ச்சிகளுக்கும், மறுநாள் திருக்கானாட்டுமுள்ளூரிலிருந்து திருப் பழமண்ணிப்படிக் கரைக்கும் போய்ச் சேரும் வரையிலும் மிகவும் உழைப்பெடுத்துப் பலவித தொண்டுகள் செய்து மகிழ்ந்தும் அவர்களை மகிழ்வித்தும் ஊக்கிய இனிய தொண்டுள்ளம் படைத்தவர்கள்.

திரு, தங்கசாமி நயினார்
மோகூர்.

திருக்கானாட்டு முள்ளூரிலிருந்து திருப்பழமண்ணிப்படிக்கரைக்கு, கொள்ளிட நதியைக் கடந்துசெல்ல, திருக்கூட்டத்தார்க்கு உதவுதல் பெரும் புண்ணியம் என்று சொல்லி, தமது படகைத் தந்து உளம் மகிழ்ந்த தூய உள்ளம் படைத்தவர்.

திரு, என். வரதராஜ பிள்ளை
நிர்வாகஸ்தர்,
நீலகண்டேஸ்வரர்
தேவஸ்தானம்,
இலுப்பைப்பட்டு.

திருவாவடுதுறை ஆதீனக் கோயில் நிர்வாகஸ்தர், மேலிடத்துக் குறிப்புகள் ஒன்றும் பெறவில்லையென்றாலும்; திருக்கூட்டத்தினர்க்குச் செய்ய வேண்டிய கடமை என்று நினைந்து அனைவரையும் வரவேற்று வழிபாடு செய்வித்துச் சிறிது நேரத்திற்குள் சிற்றுண்டி ஏற்பாடு செய்து அளித்துச் சிறப்பித்த பொறுப்பும் தகுதியும் வாய்ந்தவர்.

திரு, வீரப்பன் சேர்வை,
,, வி. எஸ். கோவிந்தசாமி
பிள்ளை
,, சபாபதி பிள்ளை

திருக்கருப்பறியலூரில் (தலைஞாயிறு) திருக்கூட்டத்தார்க்கு, திரு. S. N. சீனிவாச ரெட்டியார் அவர்களுடன் இணைந்து, முன்னின்று ஊர்ப் பெருமக்களையெல்லாம் கூட்டித் தக்கபடி வரவேற்புக் கொடுத்து, இன்னமுது செய்வித்துச் சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திய தொண்டுள்ளம் படைத்தவர்கள்.

திரு, எஸ். என். சீனிவாச
ரெட்டியார்
நிலக்கிழார்,
புள்ளிருக்குவேளூர்.

அன்புள்ளம் படைத்த பெரிய நிலக்கிழார். இவர்கள் இருப்பது திருப் புள்ளிருக்குவேளூர். திருப்புன்கூர்த் திருக்கோவிலின் தருமகர்த்தர். ஆனால் அவர்கள், திருக்கூட்டத்திற்குத் திருக்கருப்பறியலூரிலிருந்தே, திரு நல்லூர்ப் பெருமணம் போகும் வரையில், நான்கு தலங்களிலும் போக்குவரத்துக்கான வண்டி வசதிகள், தங்க இடம், உணவு முதலிய எல்லா வசதிகளையும் தாமே முன்வந்து பெருமுயற்சி கொண்டு செய்து சிறப்பித்த பெரியார்.

திரு, சொக்கப் பிள்ளை
நிலக்கிழார்,
புள்ளிருக்குவேளூர்.

நல்ல காங்கிரஸ் தொண்டர். திரு. ரெட்டியார் அவர்களுக்கு வலக் கைபோ லிருந்து அவர்களுடைய எல்லா முயற்சிகளுக்கும் துணை செய்தவர். மிக்க ஊக்கமுடை அன்பர். இத்தகைய பணிகளில் நல்ல ஊக்கம் கொண்டு முந்துபவர். நம் ஆசிரியர் அவர் கள் ஏறிச் சென்ற மாட்டு வண்டியைத் தாமே ஓட்டிச் சென்று ஆசிரியரின் அன்புள்ளத்தில் இடம் பெற்றவர்.

திரு, எஸ். கன்னையா குருக்கள்,
திருக்குரக்குக்கா.

இவ்வூர்த் திருக்கோயில் மிகவும் பாழடைந்து கிடக்க, அதைச் சுற்றிலு முள்ள முட்களையும் கற்களையும் நீக்கிக் கூடியமட்டில் மாலைகள் தோரணங் கள் கட்டி அழகு செய்து, திருக்கூட்டத்தாரை மிக்க அன்புடன் வரவேற்று வழிபாடு செய்வித்துச் சிறப்பித்து மகிழ்வித்த உண்மையான பக்தர்.

திரு, வி. முருகேசன் பி. ஏ. (Hons)
நிலக்கிழார்,
தலைஞாயிறு.

ஆசிரியர் சில தொண்டர்களுடன் திருக்கூட்டத்தின் பின்னணியில் தலைஞாயிறிலிருந்து திருப்புன்கூருக்குப் போகையில், தமது இல்லத்திற்கு அவர்களை அழைத்துப் பால் அருந்தச் செய்து, தமது வண்டியைக் கொடுத்து ஏறிச் செல்ல உதவிய நல்ல உள்ளம் படைந்த இளைஞர்.

திரு, பி. சம்பந்தம்,
ஆசிரியர்,
தலைஞாயிறு.

திருக்கருப்பறியலூர் (தலைஞாயிறு) பள்ளி ஆசிரியர். நல்ல தமிழ்ப் பற்றுடைய இளைஞர். ஆசிரியர் அவர்களின் அருள் மணக்குஞ் சொற்பொழிவைத் தமது ஊரில் கேட்டு இன்புற்று உருக்கங் கொண்டவர். பிறகு தொடர்ந்து திருப்புள்ளிருக்குவேளூருக்கும் வந்து ஆசிரியர் சொற்பொழிவைக் கேட்டுத் தாமும் சில நன்றியுரைகள் கூறி மகிழ்ந்தவர். "ஆசிரியர் பக்கலிலேயே இருந்து அவரது தூய உள்ளத்தினின்றும் ஊற்றெனப் பெருகி வரும் தெவிட்டாத தமிழமுதத்தை உண்டு உண்டு மெய்ம்மறந்து கிடக்க உங்களைப்போல் பெரும்பேறு பெற்றிலனே! கண்களை இமைகள் காப்பது போல் ஆசிரியரைக் காத்து வாருங்கள்!" என்று ஆராமையாய்க் கூறிய உணர்ச்சி மிக்க இளைஞர்.

திரு, எஸ். பொன்னுசாமி பிள்ளை,
தருமகர்த்தர்,
திருப்புன்கூர்.

கோயில் நிர்வாக தருமகர்த்தர். திரு. சீனிவாச ரெட்டியார் அவர்களுடன் இணைந்து முன்னின்று திருக்கூட்டம் திருப்புன்கூரில் வந்தபொழுது தக்கபடி வரவேற்று உணவு முதலிய வசதிகள் செய்து சிறப்பித்தவர். கன்னியாகுடி பாடசாலைச் செய்தியாளர். எனவே ஆசிரியர் அவர்களை அப்பாடசாலைக்கு அழைத்துச் சென்று பார்வையிடச் செய்து அவருடைய வாழ்த்தைப் பெற்றவர்.

திரு, சரவணப் பிள்ளை,
மேலாளர்,
திருக்கண்ணார்கோயில்.


கடமையுணர்ச்சியோடும் அன்புகனிந்த உள்ளத்தோடும் திருக்கூட்டத்தை வரவேற்றுத் தருமகர்த்தர் உத்தரவுபடி, இனிய சிற்றுண்டி செய்து கொடுத்து மகிழ்ச்சியூட்டினார்கள். அன்பர்கள் ஓர் நாளேனும் தங்கிப்போகலாகாதா வென்று ஆராமையோடு கேட்டு உள்ளம் உருகியவர்.

திரு, எஸ். அரங்கசாமி
தமிழ்ப் புலவர்,
உயர்நிலைப் பள்ளி,
கூறைநாடு, மாயூரம்.

திருக்கண்ணார் கோயிலின் மேலாளர் மகனார். தம் தந்தையுடனிருந்து, திருக்கூட்டத்தாரை வரவேற்று உதவி செய்து சிறப்பித்த உணர்ச்சியுள்ள தமிழிளைஞர்.

திரு, கு. பெரி அருணாசலம்
செட்டியார்.
இராமச்சந்திரபுரம், திருச்சி.

அஞ்சல் கண்டு, மிக்க அன்போடு திருக்கூட்டத்துக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் செய்து கொடுக்குமாறு திருப்புள்ளிருக்குவேளூரிலுள்ள தம் சாதுக்கள் மடத்துப் பணியாளருக்குத் தெரிவித்து உதவிய அன்பர்.



மேலே குறிப்பிட்ட திரு. செட்டியார் அவர்களின் உத்தரவுப்படியும், தனிப்பட்ட தமது அன்பு நெகிழ்ச்சியாலும் திருக்கூட்டத்தாரின் நிகழ்ச்சிகளில் மிக்க ஈடுபாடு கொண்டு 7-6-55 அன்று இரவு நல்ல உணவும், தங்க வசதியும் அளித்து மகிழ்வித்த அன்பர்.

திரு, இராமலிங்க தேசிகர்,
சாதுக்கள் மடம்,

திரு, ஆர். வைத்தியலிங்கம் பிள்ளை,
தலைவர்,
திருஞானசம்பந்தர் மடம்,
ஆச்சாள்புரம்.

முதன் முதலில், ஒரே கடிதம் பெற்றவுடன், மிக்க அன்போடும், அருளோடும், உணர்ச்சியோடும் திருக்கூட்டத்தை வரவேற்று வண்டி உணவு தங்கல் முதலிய எல்லா வசதிகளையும் செய்து தருவதாகத் தெரிவித்து ஊக்கமூட்டிய மெய்யன்பர். அவ்வாறே அன்பர்களுக்கு நல்ல முறையில் உதவிகள் தந்து ஆதரித்த நல்ல பண்புள்ளம் படைத்த பெரியார்.

திரு, டி. வேங்கடாசலம் பிள்ளை,
நிலக்கிழார்;
ஆச்சாள்புரம்.

வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களுடன் இணைந்து திருக்கூட்டத்திற்கு உணவு முதலிய வசதிகள் செய்த பெரியார்.

திரு, வேணுகோபால் முதலியார்,
கோயில் மேலாளர்,
திருமயேந்திரப்பள்ளி.

திருக்கூட்டத்தினர் ஓர் நாளேனும் தங்கிச் செல்லவேண்டும் என்று விரும்பி முயற்சித்த இனிய உள்ளம் படைத்த அன்பர். ஏற்றுக் கொள்ள மாட்டாமையான நிலையிலிருந்தும் அன்பர்களை எப்படியும் வழிபாடு முடிந்த பின் சிற்றுண்டியேனும் கொண்டுசெல்லத்தான் வேண்டும் என்று வற்புறுத்தி உண்பித்து இன்பமடைந்தவர். திருக்கூட்டத்திற்கு மேள தாள விருது வகைகளோடு வரவேற்புத் தந்து சிறப்பித்தவர்.

திரு, கிருஷ்ணமூர்த்தி குருக்கள்,

திரு, ஆர். கோபால சாஸ்திரிகள்

சீர்காழி.

திருக்கூட்டத்தார் சீர்காழிக்கு வந்தபோது அவர்களுக்கு வழிபாட்டு நேரங்களில் அன்போடு உதவி செய்தவர்கள்.

திரு, கிருஷ்ண முதலியார்,
தலைவர்,
திருஞானசம்பந்தர் கழகம்,
சீர்காழி.

திரு, இராமநாத முதலியார் அவர்களுடன் இணைந்து சீர்காழியில் திருக்கூட்டத்தின் நிகழ்ச்சிகளுக்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து உதவிய நல்ல அன்பர்.

திரு, C. இராமநாத முதலியார்,
வார வழிபாட்டுச் சங்கம்,
சீர்காழி.

சீர்காழியில் அலங்கரித்த யானையோடு மற்ற விருதுகளையும் கொண்டு திருக்கூட்டத்தை மிகச் சிறப்பாக வரவேற்று வீதிவலம் நடத்தி மக்களுக்கு உணர்ச்சி ஊட்டிய பொறுப்புள்ளம் வாய்ந்த சிவநேசச் செல்வர். அன்பர்களுக்கு உணவு சிற்றுண்டி வசதிகளையும், தாமே பெரும்பாலும் ஏற்றுப் பணியாற்றிய பெரியார்.

திரு, குற்றால நாராயணம் பிள்ளை,
சீர்காழி

திருக்கூட்டத்தினருக்குச் சீர்காழியில் ஓர் வேளை பகல் உணவு அன்போடு தமது இல்லத்தில் ஏற்பாடு செய்துதவிய அன்பர்.

திரு, சீனிவாச முதலியார்
தெற்கு வீதி
சீர்காழி.

சீர்காழியில் திரு. இராமநாத முதலியார் அவர்களுடன் இணைந்து ஊக்கமும் உழைப்பும் கொண்டு திருக்கூட்டத்துக்கு ஆதாவு செய்தவர்.

திரு, துரைசாமி ஐயர்
தர்மகர்த்தர்
சுந்தரேசர் தேவஸ்தானம்
அன்னப்பன்பேட்டை.

திருக்கலிக்காமூர், கீழைத் திருக்காட்டுப் பள்ளி, திருவெண்காடு மூன்றூர்த் திருக்கோயில்களுக்கும் தருமகர்த்தர். அவர், திருக்கூட்டம் அவ்விடங்களுக்கு வந்தபோது நேரில் கலந்துகொள்ள முடியாமற் போனாலும், அவர்களின் வழிபாடு சிறப்பாக நடைபெறவும், உணவு சிற்றுண்டி, தங்கல் முதலிய வசதிகள் பெறவும் தக்க ஏற்பாடுகளை முன்னதாகவே செய்து சென்ற கடமையுணர்ச்சியுடைய பெரியார். அதன்படி, திருவெண்காட்

டில் விருதுகள் மேள தாளங்கள், தீவட்டி, குடை முதலியவை, தேவார பாராயணங்கள் முதலிய சிறந்த அமைப்புகளோடு திருக்கூட்டத்தை வரவேற்ற நிலை போற்றற்குரியது.

திரு, கயிலாசம் பிள்ளை
நிலக்கிழார்.
மாதானத் தெரு.
மாயூரம்.

திரு, கே. கனகசபைப் பிள்ளை
நிலக்கிழார்,
திருக்கடவூர்.

திருக்கடவூரில் ஆசிரியர் அவர்கள் செய்யும் திருவடி வழிபாட்டைத் தமது இல்லத்தில் சிறப்பாக நடத்த வசதி செய்து கொடுத்தவர், திருக்கடவூர், கடவூர் மயானம் திருக்கோயில் வழிபாடுகள் முடிந்ததும் அன்பர்களுக்கு நல்ல பகல் உணவு தந்து அன்று மாலை ஆசிரியரின் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றையும் தமது இல்லத்திலேயே ஏற்பாடு செய்து சிறப்பித்தவர். தந்தையும் மகனுருமாய் இருவரும் சைவத்திற்கு ஆக்கமான பல அரும்பணிகள் செய்து வருகின்றனர்.

திரு,சாமிநாத பிள்ளை
நிர்வாக தர்மகர்த்தர்
தான்தோன்றி மாடம்.

இவர் திருக்கூட்டத்தின் நிகழ்ச்சிகளை முன்னதாய் அறிக்கைகள் மூலம் விளம்பரப்படுத்தி மக்களை ஈடுபடுத்தியவர். இந்த ஊரில்தான் மக்கள் ஆண் பெண் சிறுவர் அனைவருமாய்த் திரண்டு வந்தனர். அன்பர்களை வரவேற்று, வீதிவலம், வழிபாடு, சொற்பொழிவு ஆகிய எல்லா நிகழ்ச்சிகளிலும் இரவு காலம் தாழ்ந்துங்கூட ஈடுபட்டு இன்புற்றவர்கள். மாலை திருக்கூட்டத்தார் அனைவருக்கும் சிற்றுண்டியும், இரவு உணவும் கொடுத்து, மறுநாள் அடுத்த ஊர்களுக்குச் செல்லப் போதிய வண்டி ஏற்பாடுகளையும் செய்து கொடுத்து மிக்க ஆதரவு செய்த தொண்டுள்ளம் படைத்த பெரியார்.

திரு, எஸ். தங்கவேலுப் பிள்ளை
நிர்வாக அதிகாரி
செம்பொனார் கோயில்.

மிக நல்ல அன்பர். செயல் திறமை வாய்ந்தவர். திருநனிபள்ளி, திருப்யறியலூர், திருச்செம்பொன்பள்ளி மூன்று இடங்களிலும் நிகழ்ந்த எல்லா வகையான ஏற்பாடுகளுக்கும் முன்னிருந்து பணி செய்தவர். பிறகும் திருக்கூட்டத்தோடே அவ்விடங்களுக்கெல்லாம் உடன்வந்து நிகழ்ச்சிகளில் ஈடுபட்டார். தமது கோயிலில் இரவு 12 மணி ஆனபோதிலும் நல்ல மேளக் கச்சேரிகளோடும் கோயில் மரியாதைகளோடும் திருக்கூட்டத்தை வரவேற்று வழிபாடு செய்வித்து, சொற்பொழிவும் நிகழ்வித்து அருமையான சிற்றுண்டியும் கோயிலிலேயே செய்து கொடுத்து உதவி செய்தவர். ஒவ்வொரு திருக்கோயிலுக்கும் இதுபோன்ற நிர்வாகஸ்தர், அமைந்தால் எவ்வளவு சிறப்பும் பயன்தரத்தக்கதுமான செயல்கள் செய்யலாம்.

திரு, கஸ்தூரிரங்க நாயுடு
தருமகர்த்தர்
திருநனிபள்ளி.

மிக்க அன்போடு தமது சொந்த ஏற்பாட்டில், திருக்கூட்டத்தார்க்கு அறுசுவை யுணவு கொடுத்து உதவி செய்த நற் பண்பினர்.

திரு, எஸ். தண்டபாணி தேசிகர்
ஆசிரியர், ஞானசம்பந்தம்;

மஹா சந்நிதானம் அவர்களின் உத்தரவு பெற்று, அன்பும் ஈடுபாடும் கொண்டு திருக்கூட்டத்தார் இரு நாட்கள் ஆதீனத்தில் தங்கிய பொழுது உணவு, குளியல், வண்டி முதலிய வசதிகளைச் செய்து மகிழ்வித்த அன்பர்கள்.

திரு, கலியாணசுந்தர தேசிகர்,
ஆணையாளர்,
தருமை ஆதீனம்.

திரு, சட்டையப்ப பிள்ளை
பார்வையாளர்.
மயூரநாதர் தேவஸ்தானம்
மாயூரம்.

திருவாவடுதுறை ஆதீனக்கோயில்; மஹாசந்நிதானம் அவர்களின் அனுமதி பெற்று அன்று இரவு நடந்த வெள்ளித்தேர் விழாவில் திருக்கூட்டத்தாரின் ஊர்வலம் வீதிச் சொற்பொழிவு திருக்கோயில் வழிபாடு முதலியன நடத்தற்கேற்ற விளம்பரம் முதலிய முன்னேற்பாடுகள் செய்தும், அன்று இரவு திருக்கோயிலில் சிற்றுண்டி கொடுத்தும், தங்க வசதி செய்தும் உதவிய தக்க செயலாளர்.

திரு, பொன்னுசாமி பிள்ளை
நிலக்கிழார்
திருக்குறுக்கை வீரட்டம்.

தொண்டுள்ளம் படைத்த நல்ல அன்பர். இவ்வூர் மேலாளருடன் இணைந்து உழைத்துத் திருக்கூட்டத்தார்க்கு உதவி செய்தவர். அன்று இரவு அவர்கள் திரு அன்னியூர் போவதற்கு உடன் வந்து வழிகாட்டிப் பணிபுரிந்த பெரியார்.

திரு, இராமச்சந்திர முதலியார்
மேலாளர்
திருக்குறுக்கை வீரட்டம்.

தருமபுர ஆதீன மஹாசந்நிதானத்தின் உத்தரவு வழி திருக்கூட்டத்தாரின் வழிபாடு உணவு வசதிகளுக்கு ஆவன செய்து அன்பு காட்டியவர்.


திரு, சி. ப. சிங்காரஞ்
செட்டியார்
தலைவர்
குற்றாலம் சிவனடியார்
திருக்கூட்டம்.
குற்றாலம்.

குற்றாலத்தில் டாக்டர் அழகப்பா அண்ணாமலை அவர்களுடன் இணைந்து ஊக்கத்துடன் உழைப்பெடுத்துத் திருக்கூட்டத்தார்க்கு எல்லா வசதிகளையும் செய்த பேரன்பர். தமது ஊர்த் திருக்கூட்டத்தையும் திருப்பயணத் திருக்கூட்டத்தோடு சேர்த்து அவ்வூர் வழிபாட்டு நிகழ்ச்சிகளையும், தொடர்ந்து தென்குரங்காடுதுறை திருப்பந்தணைநல்லூர் ஆகிய திருத்தலங்களிலும் வந்து கலந்துகொண்டு அவ்விடத்து வழிபாடுகளையும் சிறப்பாக நடத்தி ஊக்கமளித்த சிவநேசச் செல்வர்.



திரு, டாக்டர் அழகப்பா
அண்ணாமலை M. D H.
செயலாளர்
குற்றாலம், சிவனடியார்
திருக்கூட்டம்.
தளபதி, மாம்பாக்கம் குருகுலத்
தொண்டர் குழாம்.

உணர்ச்சி மிக்க தொண்டர். மிகக் கிளர்ச்சி தரக்கூடிய முறையில் குற்றாலத்தில் திருக்கூட்டத்தை இரயிலடியில் வந்து வரவேற்று, வண்டி, வசதிகள் வேண்டிய மட்டில் செய்து, திருவேள்விக்குடி, திருஎதிர்கொள்பாடி ஆகிய அண்மைத் தலங்களுக்கு அழைத்துச் சென்று நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நிகழச்செய்தவர். அந்த இரு தலங்களிலும் குற்றாலத்திலும் முன்னதாகத் தக்கபடி நல்ல விளம்பரம் செய்து, மக்களை ஊக்கிவைத்திருந்து, வீதிவலம் வழிபாட்டு நேரங்களில், எடுத்துக்காட்டான முறையில், வரவேற்பு அன்பளிப்பு முதலிய நிகழ்ச்சிகளை நடத்தி அனைவரையும் உயர்ந்த உணர்ச்சிக் கடலில் ஆழ்த்திய அருந்தொண்டர். மேலும் திருக்கூட்டத்தாருடன் தாம் திருக்கோழம்பம், திருவாவடுதுறை, தென்குரங்காடுதுறை, திருப்பந்தணைநல்லூர் முதலிய தலங்களுக்கு வந்து ஓர் தளபதிபோல் இருந்து செயலாற்றி ஊக்கமளித்த பக்தர்.



திரு, முருகைய செட்டியார்
கீழைவீதி
குற்றாலம்.

திருவேள்விக்குடியில் திருப்பயண அன்பர்களுக்குத் தமது சொற்குற்றும் பொறி நிலையத்தில் குளிக்கவும், காலைச் சிற்றுண்டி கொள்ளவும் வசதிகள் செய்து கொடுத்து உதவிய தமிழ் அன்பர்.

திரு, இராமலிங்கம் பிள்ளை
நிலக்கிழார்
மேலைத்திருமணஞ்சேரி.
(எதிர்கொள்பாடி)

திரு எதிர்கொள்பாடியில் திருக்கூட்டத்தை மேள தாள விருது முதலிய சிறப்புகளோடு வரவேற்று வழிபாடு செய்வித்து அன்பர்கள் அனைவர்க்கும் பகல் நல்ல அமுது கொடுத்து ஆதரவு செய்த அன்புள்ளம் படைத்த இளைஞர். இக்காலத்தில் இவர் போன்ற இளைஞர்கள் இத்தகைய நல்ல இயக்கங்களின் அருந்தொண்டுகளுக்கு ஆதரவளிப்பது மிகவும் போற்றத்தக்கது. திருப்பயணத்திலுள்ள பெரும்பாலான இளம் அன்பர்களுக்கு மிக்க ஊக்கத்தையும் உணர்ச்சியையும் கொடுத்து உதவிய நிலை நினைந்து மகிழ்தற்குரியது.

திரு, எம். எஸ். நடராஜ பிள்ளை
பஞ்சுக்கார செட்டித் தெரு
குற்றாலம்.

திருக்குற்றாலத்தில் 17-6-55 அன்று மாலை அன்பர்கள் அனைவருக்கும் சிற்றுண்டி கொடுத்து அன்பாய் ஆதரவு செய்தவர்.

திரு, ஞானி சி. முருகேச முதலியார்.
நாட்டாண்மைக்காரர்
,, தண்டபாணி தேசிகர்
,, கே. மருதப் பிள்ளை
,, எம். எஸ். வெங்கட்ராமய்யர் தருமகர்த்தர்
ஓம்காரேஸ்வரர் தேவஸ்தானம்
மன்மதீச்சுரர் ,,
,, தருமகர்த்தர், ஆதிகேசவ பெருமான் கோயில்
,, தருமகர்த்தர் சோளீச்சுரர் கோயில்
,, அருணசலம் செட்டியார்

திருக்குற்றாலத்தில் திருக்கூட்டத்தார் வருகை அறிந்து, வீதிகளில் பச்சிலைத் தோரணங்கள் கட்டி, நீர் தெளித்துக் கோலமிட்டு, கொடிகள் கட்டி அலங்காரங்கள் செய்து, திருக்கூட்டம் பாராயணத்துடன் ஆங்காங்கு வந்த போது குடும்பம் குடும்பமாய்க் குத்துவிளக்குகளும் பூரண கும்பமும், கற்பூர ஆரத்தியும் கொண்டு உணர்ச்சி ததும்ப வரவேற்று, திருக்கூட்டத்தை வலம் வந்து, ஆசிரியர் திருவடிகளில் வணங்கித் திருநீறு பெற்று, அன்பர்கள் அனைவருக்கும், பாலும் பழங்களும் பட்டிகளும் கற்கண்டுகளும் திரு



சோழ நாடெங்கும் நல்லிரு



குற்றாலத்தில் குருகுலத்தார்.

திரு, துரைசாமி செட்டியார்,
,, இராஜமாணிக்கம்செட்டியார்,
,, வேலாயுத செட்டியார்,
,, கணபதி செட்டியார்,
,, குமாரசாமி செட்டியார்,
,, பாலகிருஷ்ண ஆசாரி,
குற்றாலம்.

நீற்றுப் பைகளும் வழங்கித் தம்மையும் திருக்கூட்டத்தினரையும் அருள் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திப் பெருநலம் புரிந்த சிறந்த மெய்யன்பர்கள்.

திரு, கே. வெங்கட்ராம ஐயர்
தலைமை ஆசிரியர்
உயர்நிலைப்பள்ளி
குற்றாலம்.

இரவு திருக்கூட்டத்தன்பர்கள் தங்குவதற்குப் பள்ளிக்கூடத்தில் வசதி செய்து கொடுத்த நல்ல அன்பர். ஆசிரியர் அவர்களுடைய சொற்பொழிவுகளில் மிக்க ஈடுபாடு கொண்டதோடு, பள்ளிச் சிறுவர்களையும், சிறுவயதிலிருந்தே இத்தகைய நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துவது நல்லது என்ற எண்ணத்தையும் ஆசிரியர் அவர்களிடம் தெரிவித்து ஊக்கங் காட்டிய பெரியார்.

திரு, தியாகராஜ குருக்கள்
திருக்கோழம்பம்.

இவ்வூர்த் திருக்கோயில் பூசை செய்துவரும் நல்ல உள்ளம் படைத்த பெரியார், பாழடைந்த நிலையிலிருந்தும் திருக்கூட்டத்தார் வருகிறார்களே என்று உழைப்பெடுத்துப் புல் பூண்டு முதலியவற்றைக் களைந்து, திருக்கோயிலை ஓரளவு சுத்தம் செய்து, அன்போடு திருக்கூட்டத்தை வரவேற்று வழிபாடு செய்வித்துதவிய உருக்கமான உள்ளம் படைத்தவர். இவர் போன்ற குருக்கள் எல்லாக் கோயில்களுக்கும் அமைந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்!

திரு, எஸ். பி. ராமானுஜதாஸ்
கோயில் மேலாளர்
திருக்கோடிக்கா.

திருக்கூட்டத்தை வரவேற்று உடனிருந்து வழிபாடு செய்வித்த அன்பர்.

திரு, நாகலிங்கஞ் செட்டியார்
,, நடராஜ செட்டியார்
ஸ்ரீ அரதத்த சிவாசாரியார்
பஜனை மடம்,
திருக்கஞ்சனூர்.

திருக்கஞ்சனூரில் திருக்கூட்டம் வீதிவலம் வரும்போது மடத்தில் ஆசிரியரை மாலை மரியாதைகளோடும், பூர்ணகும்ப திருவிளக்குச் சிறப்புகளோடும் வரவேற்று அன்பர்களுக்கு இனிப்புகள் வழங்கி மகிழ்வித்த நல்ல சிவபக்தி மிக்க அன்பர்கள்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)